தமிழ்ச் சிட்டு

தனித்தமிழ்ச் சிறுவர் கலை இதழ்.

குரல்: 5.
இசை: 5.
விலை:
25 காசு.

எதிர்காலந் தனைச் சமைப்பாய்!

பித்தனென் பார் சிலர்;
பேயனென் பார் சிலர்;
பிதற்றுவோன் என்றுரைப்பார்! - பெரும்
எத்தனென் பார்; சிலர்
ஏய்ப்பனென் பார்; உனை
எள்ளல்செய் தே, நகைப்பார்! - தூய
புத்தம் புதுவுணர்வால் அவர் போக்கினைப்
பூழ்க்கையென் றே, தவிர்ப்பாய்! - தம்பி
நித்தமும் இத்தரை
மக்கள் நிமிர்ந்திட
நேர்மைகொண் டே, வுழைப்பாய்!

குறைகளும் கூறுவார்;
குற்றங்கள் சாற்றுவார்;
கோடித் துயர்கொடுப்பார் - தலை
மறைவாகப் பேசுவார்;
மனம் நோக ஏசுவார்;
மக்கள்முன் பல வீசுவார்! - நெஞ்சப்
பொறையோடு நீ யவர்
புரையான போக்கினைப்
புறந்தள்ளி மேலேறுவாய்! - தம்பி
நிறைவான கருத்தினை
நெகிழ்வின்றிக் கூறுவாய்!
நிலையான பயன்விளைப் பாய்!

துணைவரு வார் சிலர்;
தோள்தரு வார் சிலர்;
துவண்டுளம் இடைநெகிழ்வார்! - வினைக்
கணைபோடு வார் சிலர்;
அகம் வேகு வார் சிலர்;
அடிவீழக் குழிவெட்டுவார்! - எய்த
கணைபோலும் பார்வையால்
கவண் போலும் சொல்லினால்
கலங்காமல் வினைசெய்குவாய்! - தம்பி
இணையற்ற தொண்டுசெய்!
ஏறுபோல் பீடுகொள்!
எதிர்காலந் தனைச்சமைப்பாய்!

சாப்பிடுவது எப்படி?

0 சாப்பிடும் வகையில் கொஞ்சம் கவனம் செலுத்தினுல் உடலுக்கு வரும் பாதி நோய்களை மருந்து இன்றியே நீக்கி, உடலை நோயினின்று காக்கலாம்.

0 சாப்பிடும் நேரம் குறைந்தது அரைமணி யளவு இருத்தல் வேண்டும். மிகவும் விரைவாகவோ, மிகவும் மெதுவாகவோ உண்ணக் கூடாது.

0 சாப்பிடுவதற்கு முன் வாயைத் தண்ணீரால் நன்கு கழுவிக் கொப்பளித்தல் வேண்டும். தாடையின் இருபுறங்களையும் விரல்களால் அழுத்தித் தேய்த்தால் நச்சுநீர் வெளிவரும். இதைத் தண்ணீரால் கொப்பளித்துத் தூய்மை செய்து வெளியேற்றினுல் உமிழ்நீர் நன்கு சுரக்கும்.

0 வாயிலிட்ட உணவை நன்ருய் மென்பதால் உமிழ்நீர் போதிய அளவு சுரந்து, உண்ணும் உணவோடு கலந்து உள்ளே சென்று உணவை எளிதில் செரிக்க வைக்கும். விரைந்து அரைகுறையாக மென்று விழுங்கிய உணவோடு உமிழ்நீர் போதிய அளவு சுரந்து கலக்காதாகையால், அவ்வுணவும் எளிதில் செரிக்காது. இதனுல் வயிற்று உளைச்சல் ஏற்படும்.

0 அன்ருட உணவில் கட்டாயமாய் பால், தயிர், மோர், கீரை, தவசங்கள் (தானியங்கள்) ஆகியன கலந்திருத்தல் வேண்டும்.

0 சாப்பிடும் பொழுது உள்ளத்திற்கு அளவிறந்த மகிழ்ச்சியையோ கவலையையோ தரும் எண்ணங்களை நினைப்பதோ, பேசுவதோ கூடாது. சாப்பாட்டைப் பற்றிய எண்ணமே மேலோங்கி இருத்தல் வேண்டும்.

0 பகலில் மிகுதியாகவும், இரவில் குறைவாகவும் சாப்பிடுவது நல்லது. சாப்பிடும் உணவு செரிக்க, குறைந்தது நான்கு மணி நேரமாகும். எனவே இந்த 4 மணி நேரத்திற்குள் வேறு எதையும் சாப்பிடக்கூடாது.

0 பசித்த பின் உண்ணுதல் வேண்டும். காலங்கடந்து உண்டால் உறக்கமின்மையும், செரியாமையும் ஏற்படுவதுடன் கெட்ட கனவுகளும் உண்டாகும்.

0 சாப்பிட்டவுடன் வாயையும் பற்களையும் நன்ருய்த்தூய்மை செய்தல் வேண்டும். பிறகு 15 நிமையங்களாகிலும் ஓய்வு எடுத்தல் வேண்டும். சாப்பிட்ட உடனேயே கடுமையான வேலைகளைச் செய்தல் கூடாது. செய்தால் உடல் அயர்வும் மூச்சுப் பிடிப்பும் உண்டாகும்.

0 உடலுழைப் பில்லாதவர்களுக்குச் சாப்பிட்ட உணவு சரிவரச் செரிமானமாகாதாகையால், அவர்கள் நாள்தோறும் ஏதாவது உடற்பயிற்சிகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

—நன்றி. 'மூலிகை மணி' மலர்–7. இதழ்–9.

தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ்
சிறுவர் கலை இதழ்

இன்றைய பயனே நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர் நாளைய உலகம்!
நன்று செய்வதே நமக்குநல் வாழ்க்கை!
என்றும் அழியாது இருப்பது புகழே!

குரல்–5. | தி. பி. | உ௰௨ | இரட்டை; – சூன் 71 | இசை–5.

நெஞ்சை அகலப் படுத்து!
அறிவை ஆழப் படுத்து!
தோளை உயரப் படுத்து!

நீலப் பெரு வானம்! – அதில்
நீந்தி உலாவரும் கதிரவன் பார்! – முகிற்
கோலச் சிதறல்களாம்; — பல
கோடிவிண் மீன்களின் கூட்டங்களாம்! – தம்பி
காலப் பெருவெளிபார்! – வீசுங்
காற்றினைப் பார்; ஒளி ஊற்றினைப் பார்! – மிகு
சாலப் பரப்புக் கண்டாய்! – உயிர்ச்
சாற்றிலும் அத்தகு ஆற்றல் உண்டாம்! — பார்
நீலப் பெரு வானம்!

வெளியீட்டாளர், பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்.
தென்மொழி மின் அச்சகம், கடலூர்–1. தமிழகம்.

நெஞ்சு சிலிர்த்தது பார்! — கதிர்
நெற்றினைப் போல் உயிர் முற்றிடல் பார்! – தூய
பஞ்சு பறந்தது போல் – உளம்
பறந்ததடா! உயிர் நிறைந்ததடா! – தம்பி
கொஞ்சமோ மிஞ்சும் இன்பம்! – உயிர்க்
கொப்பரை நிரம்பி வழியுதடா! – காற்றை
விஞ்சிடும் ஆற்றல் கண்டாய்! – வான
வெளியினைப் போல் நெஞ்சம் விரிந்ததடா! – அட
நெஞ்சு சிலிர்த்தது பார்!

நீலக் கடல்வெளி பார்! – அதில்
நீண்டு சுருண்டு விழும்அலைபார்! – அதன்
ஓலம் சலிப்பதுண்டோ? – உயிர்
ஊற்றுச் சுரந்தது போல் மகிழ்வாய்! – தம்பி
காலப் புழுதி யெல்லாம் – உன்றன்
கால்களில் பட்டுப் பறக்குதடா – சிறு
தோலைப் பொதிந்த உடல் – சுடர்
தோற்றும் உயிர்க்கொரு மாற்றஞ்செய்மோ – அட
நீலக் கடல்வெளி பார்!

நெஞ்சை அகல உழு! – அதன்
நினைவினை வாரியெங் கெங்கும் இறை-சிறு
குஞ்செனினும் உயிர்த்தூள்! – ஒளி
கூட்டிடும் பேரிறை நாட்டிய ஊர்! – அது
துஞ்சுவ தோ இருளில்? – ஒரு
தூரசுமன்றோ வானில் உலாவிவரும் – தம்பி
எஞ்சிடும் வாழ்க்கையிலே – உயிர்
ஏற்றமும் காண்! புது மாற்றமும் செய் –! அட
நெஞ்சை அகல உழு!

அறிவை ஆழப் படுத்து! – அஃது
ஆக்கிய சோறென நாக்கில் படை! – உயிர்ச்
செறிவில் வேறென்ன பயன்? - நாற்றச்
சேற்றிலும் தாமரை விளைவதுண்டே! – பல
நெறிகளை முன் படைத்தாய் – அவை
நீள அகலத்தைப் பின் உடைத்தாய்! – தீய

வெறிகளில் மூழ்கிணே காண் ! – அந்த
வெற்று வெளிகளில் உற்றுணேப் பார் ! – உன்றன்
அறிவை ஆழப் படுத்து !

தோளேக்குன் ருய் உயர்த்து ! – பெருந்
தோல்விகண் டாலும், நீ கால்வளேயேல் – ஒரு
வாளேச் சுழற்றும் விசை – தனில்
வையகம் தன்னேயுன் கையகம் காண் ! – வெறும்
ஊனேத் தசை யுடலம் – நல்
உப்பிட்டு வைக்கினும் தப்பிடுங் காண் ! – எனில்
வேளேக்குக் காப்பதுவோ ? – வெட்ட
வெளியினில் காலேவை ! வானில் பற ! – அட
தோளேக் குன்ருய் உயர்த்து !

வானியல் வாய்பாடு.

1 ஒளி ஆண்டு : 1,182,500,000,000 கற்கள்.

1 வானியல் அலகு : 93,500,000 கற்கள்.

1 பார்செக் : 206,265 வானியல் அலகுகள்.

1 கிலோ பார்செக் ; 1000 பார்செக்குகள்.

1 மெகா பார்செக் : 1000 கிலோ பார்செக்குகள்.

ஒரு கிலோ பார்செக்கின் தொலேவு எவ்வளவு என்பது பற்றி ஒரு விளக்கம் தருகின்றனர் அறிவியலறிஞர்கள். நம் உலகத்திற்கும் நிலவிற்கும் இடையில் உள்ள தொலேவை ஒரு சிலந்தி வலேயின் இழையைக் கொண்டு இணேப்பதாக வைத்துக் கொள்ளுங்கள். (நிலவிற்கும் நம் உலகத்திற்கும் இடையில் உள்ள தொலேவு 2,50,000 கற்கள் அல்லது 400,000 கிலோ மீட்டர்). அப்பொழுது தேவைப்படும் சிலந்தி வலே இழையின் மொத்த எடை 2·3 கல்லெடை (டன்). ஆனுல் ஒரு கிலோ பார் செக் தொலேவு நீட்டப்பெறும் சிலந்தி வலே இழையின் எடை எவ்வளவு தெரியுமா? மொத்தம் 500,000,000,000 கல்லெடை (டன்கள்) இருக்கும்.

இந்திய மக்கள் தொகை.

(சில புள்ளி விளத்தங்கள்)

* 1971மார்ச்சு 31 நள்ளிரவில் முடிந்த 11-ஆவது குடிமதிப்புக் கணக்குப்படி இந்தியாவின் மொத்த மக்கள் தொகை : 54கோடியே, 69 இலக்கத்து, 55 ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பத்தைந்து; [54, 69,55, 945.]. 1961 - இல் இருந்த மக்கள் தொகை : 43, 90, 72, 582. கடந்த பத்தாண்டுகளில் பெருகியுள்ள மக்கள் தொகை : 10, 78, 83, 363.

* இப்பொழுதுள்ள மொத்தமக்கள் தொகையில் 28, 30, 55, 987 பேர் ஆண்கள். பெண்கள் 26, 38, 99, 958 பேர். அஃதாவது 1000 ஆண்களுக்கு 932 பெண்கள் உள்ளனர்.

* இன்றைய நிலையில் இந்தியாவில் உள்ள கல்வி கற்றவர் தொகை 29·35 விழுக்காடு ஆகும். இதில் ஆண்கள் 39·49விழுக்காடு பெண்கள் 18·47 விழுக்காடு.

* இக்கால் உள்ள உலக மக்கள் தொகை 371·0 கோடியாகும். இந்திய மக்கள் தொகை உலகத் தொகையின் ஏழில் ஒரு பங்கு. அல்லது 15 விழுக்காடு ஆகும்.

* நிலப்பரப்பில் இந்தியா உலகில் உள்ள நாடுகளில் ஏழாவது நாடு. ஆனால் மக்கள் தொகைப்படி இந்தியா உலகின் இரண்டாவது பெரிய நாடு.

* உலகில் உள்ள மக்கள் தொகையில் ஏறத்தாழ 75 கோடிப் பேர் சீனாவில் உள்ளனர். [அதன் 1969-ம் ஆண்டுக் கணக்குப்படி]

* அதன் பின் மக்கள் தொகையில் பெரிய நாடுகள்: உருசியா —[24·56 கோடி]; அமெரிக்கா ஒன்றிய நாடுகள் : [23.10கோடி] பாக்கித்தான் — [12·5கோடி]; சப்பான் [10 கோடி]; கனடா - [3 கோடி]; ஆசுத்திரேலியா - [2 கோடி].

* உருசியா, அமெரிக்கா, சப்பான் ஆகிய மூன்று நாடுகளின் மக்கள் தொகை இந்தியாவின் இன்றைய மக்கள் தொகைக்கு ஏறத்தாழச் சமமாகும்.

* இந்தியாவிலேயே மிகுந்த மக்கள் தொகை உள்ள மாநிலம், வடக்குப் பைதிரம் [உத்தரப் பிரதேசம்] ஆகும்; அதன் மக்கள் மக்கள் தொகை 8·83 கோடி.] அடுத்தது பீகார் [5.64 கோடி]. அதற்கடுத்தது மகாராட்டிரம் [5·03 கோடி].

* மாநிலங்களின் மக்கள் தொகை விளத்தங்கள் வருமாறு:—

1. வடக்குப் பைதிரம் [உத்தரப் பிரதேசம் 8,82,99,453. [மொத்தத்தில் 16·14 %]

2. பீகார் : 5,63,87,296 [10·31 %]
3. மகாராட்டிரம் : 5,02,95,081 [9,20 %]
4. மே. வங்காளம் : 4,44,40,095 [8·13 %]
5. ஆந்திரம் : 4,33,94,951 [7·93 %]
6 நடுவண் பைதிரம் : 4,14,49,729 [7·58 %]
7. தமிழ்நாடு - 4,11,03,125 [7·52 %]
8. மைசூர் : 2,92,24,046 [5·34 %]
9. குசராத் : 2,66,60,929 [4·87 %]
10. இராசத்தான் : 2 57,24,142 [4·70 %]
11. ஒரிசா : 2,19,34,827 [4·01 %]
12 கேரளா : 2,12 80,397 [3.87 %]
13 அசாம் : 1,48,57,314 [2·72 %]
(நேபா, மேகாலயா நீங்க)
14. பஞ்சாப் : 1,34,72,972 [2·46 %]
15. அரியாஞ : 99,71,165 [1·82 %]
16 சம்மு–காசுமீர் : 46,15,176 [0·84 %]
17. இமாலயப் பைதிரம் : 34,24,332 [0·63 %]
18. நாகாலாந்து : 5,15,561 [0·09 %]
19. இந்திய ஒன்றியப் பைதிரங்களும், பிற பகுதிகளும் (நேபா, மேகாலயா உட்பட) } 99, 05, 354 [1·82%

* இந்தியாவில் கல்வி கற்றவர்கள் சண்டிகரில் தான் மிகுந்துள்ளனர். அங்குள்ள மக்கள் தொகையில் 61·24 விழுக்காட்டினர் கற்றவர்கள். இரண்டாவது மாநிலம் கேரளா: அங்கு 60 · 16 விழுக்காட்டினர் கற்றவர்கள். 3–வது நகரம் : தில்லி. (56 · 65.) கல்வியில் தமிழ்நாட்டை விடப் புதுவை விஞ்சியிருக்கின்றது. புதுவையில் 43·36 விழுக்காட்டினர் படிக்காதவர்கள். தமிழ்நாட்டில் 39·39 விழுக்காட்டினரே படித்தவர்கள்· 1961–இல் தமிழ்நாட்டில் இருந்த கற்றவர்கள் விழுக்காடு 31·41. கல்வியில் மிகவும் பின் தங்கிய நகரம் நேபா (9 · 34) மக்கள் தொகை மிகுதியாக உள்ள வடக்குப் பைதிரத்தில் கற்றவர்கள் 21·68 விழுக்காட்டினரே ! ஆக, இந்தியாவில் உள்ள மக்களில் 29·35 விழுக்காட்டினரே கற்றவர்கள். பெண்களில் 18·7 விழுக்காட்டினரே கல்வியறிவுள்ளவர்.

* ஆண்களை விடப் பெண்கள் மிகுதியாக உள்ள மாநிலம் கேரளா. அங்கு 1000 ஆண்களுக்கு 1019 பெண்கள் உள்ளனர்.

உங்களுக்குத் தெரியுமா?

* நாம் குடியிருக்கும் வீட்டின் நான்கு சுவர்களும் நான்கு திசையை நோக்கியே இருக்கும். ஆனால் இந்நிலவுலகில் இரண்டே இரண்டு இடங்களில் கட்டப்படும் வீடுகளில் உள்ள நான்கு சுவர் களும் ஒரே ஒரு திசையைத்தான் குறிப்பிடும். அந்த இடங்கள் தாம் வடமுனையும், தென்முனையும் ஆகும். வடமுனையில் உள்ள வீட்டின் நான்கு சுவர்களும் தெற்குத்திசை நோக்கியே இருக்கும் தென்முனையில் உள்ள வீட்டின் நான்கு சுவர்களும் வடதிசை நோக்கியே இருக்கும்.

* உலகம் சுற்றுகின்ற வேகம் ஒரே சீராக இருப்பதில்லை. பல ஆண்டுகள் விரைந்து சுற்றும்; அதன்பின் சில ஆண்டுகள் மெதுவாகச் சுற்றும். பின் மீண்டும் வேகமாகச் சுற்றத் தொடங்கும்.

* சோவியத் ஆசியாவின் கிழக்குக் கோடியில் பேரிங் நீர் நிலையில் உள்ள தாசுநேவ் என்ற முனையில்தான் ஒவ்வொரு புது நாளும் பிறக்கின்றது. அதற்கு மேற்கில் உள்ள இடங்களில் டிசம்பர் 31-ஆக இருக்கும் பொழுது, அதன் கிழக்கில் உள்ள இடங்களில் ஏற்கனவே சனவரி-1 ஆகி இருக்கும்.

* வளர்பிறை நிலா மாலை வேளையில் மேற்குவானில் காணப் படும்; தேய்பிறை நிலவு விடியற்கால வேளையில் கிழக்கே காணப்படும்.

* நிலவின் நிறை உலகின் நிறையில் 1/81 பங்கு.

* கதிரவனின் நிறை உலகின் நிறையைப் போல் 3,30,000 மடங்கு.

* மூன்று சூரிய மறைப்புக்கு இரண்டு நிலவு மறைப்பே நிகழ்கின்றன.

* வானத்தில் தெரியும் எல்லா விண்மீன்களையும் (சில விண்-மீன்கள் கதிரவனை விட 40,000,000 மடங்கு பெரியவை.) ஒரே குவியலாக இடைவெளி இல்லாமல் இணைத்து வைத்தால், அவை முழு வானத்தில் $\frac{1}{20,000,000,000,000}$ இருபது இலக்கம் கோடியில் ஒரு பகுதியையே அடைத்துக் கொள்ளுமாம்.

* சிரியசு என்ற விண்மீனில் உள்ள மூலப் பொருளில் ஒரு குவளை யளவு எடுத்தால் அதன் எடை 12 கல்லெடை (Tons) இருக்குமாம். அந்தக் குவளை யளவு மூலப்பொருளை எடுத்துச்செல்லத் தொடர் வண்டியின் ஒரு பெட்டியே வேண்டுமாம்.

கழுதை அழுத கதை.

துரை - மாணிக்கம்.

உள்ளச் சிலிர்ப்பால்,
உருவில் மிகத்தாழ்ந்த
வெள்ளைமுக் குக்கழுதை
முன்னிலையில் தான்வீழ்ந்(து)
அதனுதவி வேண்டி, முகம்
அங்காந்தா லும், தன்
பதவிக்கே உள்நாணிப்
பாவைக் கழுதையிடம்,

"அம்மா, கழுதையே !
அஞ்சாதே ! நானேதான்
இம்மா பெருங்காட்டில்
எல்லா விலங்குகட்கும்
வல்லரசன்; முன்மாலை
வந்த விடத்திலிங்குக்
கொல்லப் படவிருந்தேன்;
கூற்றுவன்போல் வந்தொருவன்
வேட்டெஃகத்தால் சுட்டென்னை
வீழ்த்தி யிருப்பான்காண் !
வேட்டொலியைக் கேட்டவுடன்
வேலிக்குள் ஓடிவிட்டேன் !
ஆனாலும் காலில்
அடிபட்டு வீழ்ந்துவிட்டேன் !
போனாலும் போயிருப்பேன்;
பொல்லாத வேளையிலும்
நல்லதொரு நேரத்தால்
நான் பிழைத்துக் கொண்டேன் காண் !
காலில்தான் நல்ல அடி !
மற்றோ கவலையில்லை !
ஏலவில்லை ஊன்றிடவே !
என்செய்வ" தென்(று), அரிமா
நோவால் மிகவருந்தி
நொய்யவுரை செய்ததுவே !

காவாயோ என்றந்தக்
கண்கள் உரைப்பனபோல்

தோன்றிடவும், பெட்டைக்
கழுதை துடிதுடித்தே,
அண்டையிலே ஓடி
அடர்ந்து வளர்ந்த கள்ளித்
தண்டொன்றைக் காலால்
'தடக்'கென் றொடித்துவந்து
பொங்கிவரும் பாலையதன்
புண்ணில் சொரிந்ததுவே !

எங்கிருந்தோ வந்தே
இரங்கி யுதவுகின்ற
நற்கழுதை யம்மையின்
நல்லுள்ளம் தானறிந்து,
கற்கடின நெஞ்சுங்
கனிந்து மகிழ்ந்திடுமால் !
கள்ளிப்பால் விட்டவுடன்
புண்ணின் கடுகடுப்போ
உள்ளும் புறமும்
ஒருவா றடங்கிடவே,
மெல்ல எழமுயன்று
மேனி நடுங்கியதாய்
வல்லென் றரிமா
வலிவின்றிச் சாய்ந்ததுவே !

அக்கால் கழுதை
சடக்கென் றதைத்தாங்கி,
"தக்கநிலை வாய்ந்திடுமுன்
தாங்கள் நடந்திடவும்
கூடா" தென வுரைத்து,
"வல்விலங்கின் கோவேந்தே !
ஆடா(து) அசையா(து)
அயர்ந்திருங்கள் காலைவரை.
நாளை விடியட்டும் !
தாங்கள் நலமுற்றால்
மீளுவோம்" என்று
மிகநயந்து வேண்டியதாம் !

(— தொடரும்.)

முத்துமொழிகள்

* ஒருவர்க்கு அழிவில்லாத சீரிய செல்வமாக அமைவது கல்வியாகும். கல்வியொழிந்த பிறவெல்லாம் நிலைத்த செல்வங்கள் ஆகா.

— வள்ளுவர்.

* மாந்தனிடமிருக்கும் உயர்ந்த ஆற்றலைக் கண்டுபிடித்து, அதை வளர்ப்பதே கல்வியின் நோக்கமாகும். — கன்பூசியசு

* தான் கற்ற கல்வியின்படி செயல் புரியாத ஒருவன், நிலத்தை உழுதுவிட்டு விதைக்காதவன் போலாவான். — சாஅதி.

* கல்வி என்பது ஆற்றில் எதிர் நீச்சல் அடிப்பது போன்றது. அடித்துக்கொண்டே இருக்க வேண்டும். நிறுத்தினால் பின்னுக்குத் தள்ளிவிடும். — ஓர் அறிஞர்.

* மாந்தன் தன்னையும், தான்வாழும் சூழ்நிலையையும் புரிந்து கொள்ள உதவியாய் இருப்பது கல்விதான். — உருசோ.

* கல்வி இல்லாத ஒருவன்தான் உலகிலேயே இரக்கப்படுவதற்கு உரியவன். பிறகுதாம் கூன், குருடு, செவிடு, ஊமை முதலியவர்கள். — சேக் சலீம்.

* கல்வி இல்லாதவன் கயவன். அவன் விலங்கிற்கு ஒப்பானவன். ஆதலின், அவனுடைய விலங்குத்தன்மை நீங்கி மாந்தத் தன்மை அடையக் கல்வி இன்றியமையாதது. — அசோகன்.

* ஒழுக்கம் அளிப்பது, மன ஆற்றலைத் தருவது, அறிவுப் பரப்பைத் தருவது, ஒருவனை தன்னம்பிக்கையுடன் இருக்கச் செய்வது ஆகிய இவற்றை அளிக்கும் கல்வியே நமக்கு வேண்டும்.

— விவேகானந்தர்.

[தொகுப்பு : சே. இ. சேக் சுலைமான், புதுவை-1.]

தெரிந்து கொள்ளுங்கள்

* உலகிலேயே மிகப்பெரிய மணிக்கூடு : மொண்ட்றில் [கனடா] நகரில் உள்ளது. இதன் நேரம் காட்டும் தட்டு [Dial] பிக்பென் மணிக்கூண்டில் உள்ளதினும் ஆறு மடங்கு பெரியது. இதற்கு மூன்று முன்புறங்கள் உள்ளன. ஒவ்வொன்றின் குறுக்களவு 60'. இதன் இயந்திர எடை. 6கல்[டன்]எடை. நிமையம் காட்டும் இலக்கங்களுக்கு இடையேயுள்ள வெளி 3'. நிமையக்கையின் நீளம் 30'. நிமையக்கையின் எடை 2500 [ராத்தல்] நிறை. ஓர் ஆண்டில் நிமையக்கை சுற்றிவரும் தொலைவு 312 கல்.

* உலகின் மிக நீண்ட குழாயின் அமைப்பு : ஆங்கில-பாரசீக மண்ணெய் நிறுவனத்தாரால் ஈராக்கில் இருந்து நடுத்தரைக் கடலில் உள்ள துறைமுகங்களுக்குப் போடப்பட்டுள்ள குழாய்ப்பாதை ஆகும். இதன் நீளம் 1150 கற்கள். இக்குழாய் வழி ஆண்டிற்கு 40,00,000 கல் எடை மண்ணெய் செல்லுகிறது.

* 1883 – ஆம் ஆண்டு ஆஃகசுட்டுத் திங்கள் 27 – ஆம் நாள் கிரகற்றோவா தீவில் உள்ள (இத்தீவு சுமத்திராவிற்கும் சாவாவுக்கும் இடையில் உள்ளது) பிக்போர்புதான் என்னும் எரிமலை வெடித்து 35,147 மக்களைக் கொன்றது. இதனால் புழுதியான தூசிப்படலம், உலகம் முழுமையிலும் பரவியது. இதன் கரணியமாக உலகின் தொலைவான இடங்களில் மூன்று ஆண்டுகள் கதிரவன் மறையும் நேரத்தில் விண்ணில் நிறங்கள் தோன்றின. எரிமலை வெடித்ததில் ஏற்பட்ட ஒலியானது 3000 கற்களுக்கு அப்பால்உள்ள உரொட்ரிகுசு தீவிற்குக் கேட்டது.

* உலகிலேயே உள்ள மிகப்பெரிய மலைக்குடைவு சிம்பிளன் குடைவு ஆகும். இஃது அல்ப்சு மலைக்கூடாக சுவிட்சர்லாந்துக்கும் இத்தாலிக்கும் இடையேயுள்ளது. இதன் நீளம் 12½ கல். இது 1905-இல் குடைந்து முடிக்கப்பட்டது,

* உயரத்திலிருந்து விழும்பொருள் எதுவானாலும் தடை ஏற்படாவிட்டால் முதல் வினாடியில் 32' விரைவிலும் இரண்டாவது வினாடியில் 64' விரைவிலும் மூன்றாவது வினாடியில் 96' விரைவிலும்,

இப்படி விநாடிக்கு 32' மிகுதியாகும் விரைவுடன் விழும். பொருளின் எடை எதுவாயிருப்பினும் அப்பொருள் இதே விரைவில்தான் தரையை நோக்கி விழுகிறது.

* உலகில் 6,00,000 பூச்சி வகைகளுக்கு மேல் அறியப்பட்டு உள்ளன. அவற்றின் அறிவியல் பெயர்களை ஒன்றின் கீழ் ஒன்றாகத் தாளில் அச்சிடுவதானால் அத்தாள் 15 கல்நீளம் உள்ளதாக இருக்கும். ஒருவன் நாளொன்றுக்கு ஒரு பூச்சியைப் பற்றிப் படிக்கிறான் என்று வைத்துக்கொண்டால் அவன் எல்லாப் பூச்சிகளையும் பற்றிப் படிக்க 2000-ஆண்டுகள் வாழ வேண்டும்.

* உலகிலேயே மிகப் பெரிய ஆலமரம் கல்கத்தாவிலுள்ள பயிரியல் தோப்பில் இருக்கிறது. இது $2\frac{1}{2}$ குறுக்கம் [ஏக்கர்] நிலத்தை மூடி வளர்ந்திருக்கிறது. இதற்கு 15,000 விழுதுகள் உண்டு. ஒவ்வொரு விழுதும் ஒவ்வொரு தூண்போல் காட்சியளிக்கிறது.

[தொகுப்பு : ஞா. மரியநேயன், கரிசல்பட்டி, திண்டுக்கல்.]

தமிழ்ச்சிட்டு கடலூர்-1.

(தனித்தமிழ் சிறுவர் கலையிதழ்)

மாற்றப்பட்ட உறுப்பினர் கட்டணங்கள்.

	உள்நாடு.	வெளிநாடு.	கொழும்பு.
ஆண்டுக்கட்டணம் உருபா	3 00	6-00	4 00
தனியிதழ் ''	0-25	0-50	0-35

(அரையாண்டுக் கட்டணம் இல்லை)

ஓரிதழுக்கு 50 காசு மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க !

தென்மொழி கடலூர்-1.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.

ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு.
ஆண்டுக் கட்டணம் :	9 உருபா.	10-50 உருபா.	14 உருபா.
அரையாண்டுக் கட்டணம்:	5 உருபா.	6 உருபா.	7—50
தனிஇதழ்:	75 காசு.	காசு 90.	1—10

கட்டுரை வரைவது எப்படி?.

புலவர்-திருமேனி அரவரசன் [நாகராசன்]

முன்னுரை: இது செந்தமிழின் மறுமலர்ச்சிக் காலம். நம் பள்ளி மாணுக்க மாணுக்கியர், தமிழார்வும், விருப்பும் மெச்சத்தக்கவை. அவரைத்தமிழில் மேம்படச் செய்வித்தல் ஆசிரியர் கடமை. ஆதலின் பள்ளி மாணுக்க மாணுக்கியர்க்குச் சிறப்பாகக் கட்டுரைப் பயிற்சி அளித்தல் முதன்மை ஆகிறது. எனவே, இங்குக் கட்டுரை வரைவது பற்றி விளக்கம் செய்வோம்.

கட்டுரை இலக்கணம்: கட்டுரையர்வது கட்டி உரைப்பதாகும். இனி, கட்டுரைக்குக் கோப்புரை என்ற பொருளும் உண்டு. ஒரு பொருளைப் பற்றிய கருத்துக்களைத் தொகுத்து வகைப்படுத்தி ஒழுங்கு பெறச் சுவையுடன் தெளிவும் செறிவும் தோன்ற உரைப்பதே கட்டுரையாகும்.

கட்டுரைக் குறிக்கோள்: கட்டுரையின் குறிக்கோள் கேட்போர் அல்லது படிப்போர்க்குப் பொருளின் கருத்தினைச் செவ்விதின் உணர்த்தலாகும். கட்டுரை உரைப்பது தனித்திறன். இங்கு, கற்பின் தலைவி கண்ணகி நெடுஞ்செழியன் திருமுன்னர்க் கட்டுரைத்துத்தன் கணவன் களக்கம் நீக்கிய செய்தியை நினைவில் கொள்க. அவள் உரைத்ததுதான் கட்டுரை.

கட்டுரையின் அமைப்பு: எக்கட்டுரை உரைப்பினும் அதற்கு அமைப்பியல் மிக இன்றியமையாதது. அமைப்பியல் என்பது கட்டுரைக்கு அமைக்கப்பட்ட ஒழுங்கான கட்டுக்கோப்பு. அது கட்டுரைக்கு வரையறுக்கப்பட்ட சட்டதிட்டம். அமைப்பியல் இல்லா எக்கட்டுரையும் மணமில் மலர்போலவும், மகளிரில் இல்லம் போலவும் மாண்பிழந்து போதல் உறுதி.

கட்டுரைப் பொருள்கள்: கட்டுரை பல வகைப்படும். அவற்றைப் பதினைந்து வகைப்படுத்தி ஈண்டுக் காட்டியுள்ளேன். அவை வருமாறு: இயற்கைப் பொருள் கட்டுரை, செயற்கைப் பொருள் கட்டுரை, விலங்குக் கட்டுரை, பறவைக் கட்டுரை, வண்ணனை [வருணனை]க் கட்டுரை, விளக்கக் கட்டுரை, வரலாற்றுக் கட்டுரை, அறப்பொருள் கட்டுரை, கருதியல் [சிந்தனைக்] கட்டுரை, பாணிப்புக் கட்டுரை, தருக்கியற் கட்டுரை, நோட்டக் கட்டுரை, ஆராய்ச்சிக் கட்டுரை, புகழ்ச்சிக் கட்டுரை என்பன. இங்குப் பெரும்

பாலும் எல்லாக்கட்டுரைப் பொருள்களும் அடக்கிக் காட்டப்பட்டன. இவற்றுள் அடங்காமல் வருவனவும் சில உள. அவற்றை வந்த வழிக்கண்டு கொள்க.

கட்டுரை அமைப்பியல்கள்: இங்கு மாணுக்க மாணுக்கியர் நலங்கருதி மேற்காட்டிய கட்டுரைப் பொருளுக்குரிய அமைப்பியல்களைக் காண்போம். அவ்வமைப்பியல்களை மாணுக்க மாணுக்கியர் செவ்விதின் அறிந்துதம் நினைவில் இருத்திக் கொள்ளின் அவர்கள் கட்டுரை வன்மையில் தலைமை பெறுவது உறுதியாகும்.

இயற்கைப் பொருள் கட்டுரை: இயற்கைப் பொருள் கட்டுரை என்பது உலகில் காணப்படும் யாதானும் ஓர் இயற்கைப் பொருளைப் பற்றிய கட்டுரையாகும். சான்றுகள்: நிலக்கரி, வைரம், கிளிஞ்சல், பருத்தி முதலியன.

அமைப்பியல்: 1. முன்னுரை, 2. வரையறை, 3. கிடைக்குமிடம், 4. வகையும், வண்ணனையும், 5. எடுக்கும்முறை 6. பயன், 7. முடிவுரை.

செயற்கைப் பொருள் கட்டுரை: செயற்கைப் பொருள் கட்டுரை என்பது மாந்தர் உழைப்பாலோ பொறிகளின் வழியாலோ உண்டான பொருள்களைப் பற்றிய கட்டுரையாகும். சான்று:- மாமாடம், ஓலைப்பாய், மண்பொம்மை, தூவல், தாள் முதலியன.

அமைப்பியல்: 1. முன்னுரை, 2. வரையறை, 3. வகையும் வண்ணனையும், 4. செய்யுமிடம், 5. செய்யுமுறை, 6. பயன், 7. முடிவுரை.

விலங்குக் கட்டுரை: விலங்குக் கட்டுரை என்பது வீடுகளிலும் காடுகளிலும் வாழும் விலங்குகளைப் பற்றிய கட்டுரையாகும். சான்று: ஆன், நாய், மான், யானை முதலியன.

அமைப்பியல்: 1. முன்னுரை, 2. வரையறை, 3. வாழிடம், 4. வகையும், வண்ணனையும், 5. பழக்க வழக்கம், 6. பயன், 7. முடிவுரை.

பறவைக் கட்டுரை: பறவைக்கட்டுரை என்பது எப்பறவையைப்பற்றியேனும் விளக்கி வரைகின்ற கட்டுரையாகும். சான்று. கிளி, புறு, கோழி, மயில் முதலியன. விலங்குக் கட்டுரையின்

அமைப்பே பறவைக் கட்டுரைக்கும் அமைப்பாகும். ஆதலின். தனித்து அமைப்புச்சுட்ட வேண்டிய தேவை இன்று.

வண்ணனை [வருணனை]க் கட்டுரை: வண்ணனைக் கட்டுரை என்பது யாதானும் ஒரு பொருளைப் பற்றி வண்ணித்து [வருணித்து] எழுதும் கட்டுரையாகும். சான்று: மாலை, மழை, நகரம், ஆறு முதலியன வண்ணனைக் கட்டுரையின் அமைப்பியல் பொருள் நிலைக் கேற்பச் சிறிது வேறுபட்டுவரும். ஆதலின், எல்லா வண்ணனைப் பொருளுக்கும் ஒரே அமைப்பியல் கொண்டு கட்டுரையாத்தல். குறையாய்ப் போய்முடியும். இங்கு ''நகரம்'' எனும் பொருளுக்குரிய அமைப்பியலைச் சுட்டுவோம்.

அமைப்பியல்: 1. முன்னுரை, 2. வரையறை, 3. எல்லைகள் 4. தோற்றம், 5. அமைப்பு முறை, 6. இன்றியமையாத இடங்கள், 7 நகர வாழ்க்கை, 8. பயன் 9. முடிவுரை.

விளக்கக் கட்டுரை: விளக்கக் கட்டுரை என்பது ஒரு பொருளைப் பற்றி நன்கு விளக்கி எழுதும் கட்டுரையாகும். சான்று: வானொலி, பேசும்படம், மின்சாரம் முதலியன. விளக்கக் கட்டுரை அமைப்பிய லும் பொருள் நிலைக்கேற்பச் சிறிது வேறுபட்டுவரும் என்பதை அறிதல் வேண்டும். இங்கு ''வானொலி'' எனும் பொருளுக்குரிய அமைப்பியலைக் காண்போம்.

அமைப்பியல்: 1. முன்னுரை, 2. வரையறை, 3. வானொலி யைக் கண்டுபிடித்தவர், 4. அமைப்புமுறை, 5. பயன், 6. முடிவுரை.

நிகழ்ச்சிக் கட்டுரை: நிகழ்ச்சிக் கட்டுரை என்பது நடை பெற்ற யாதானும் நிகழ்ச்சியை விளக்கி வரையும் கட்டுரையாகும் சான்று: குடியரசு நாள் விழா, பொங்கல் விழா, திருமணம், ஒரு நேர்ச்சி [விபத்து] முதலியன.

அமைப்பியல்: 1. முன்னுரை, 2. விழா இன்ன தென்பது, 3. தோற்றமும், நோக்கமும், 4. காலமும், இடமும், 5. நடை பெறும் முறை, 6. பயன். 7. முடிவுரை.

வரலாற்றுக் கட்டுரை: வரலாற்றுக் கட்டுரை என்பது பெரியோர் வாழ்க்கை வரலாற்றை விளக்கி வரையும் கட்டுரையாகும்.

சான்று: அண்ணல் காந்தி, ஒப்பிலக்கணப் பேரறிஞர் கால்டு வெல்லர் முதலியோர்.

அமைப்பியல்: 1. முன்னுரை, 2. பிறப்பு, வளர்ப்பு, 3. கல்வி, 4. அலுவல், 5. இல்லறம், 6. பண்புகள், 7 தொண்டுகள், 8. இறுதிக்காலம், 9. முடிவுரை.

அறப்பொருள் கட்டுரை: அறப்பொருள் கட்டுரை என்பது பெரியோர் சொல்லி வைத்த பொன்மொழிகளை விளக்கி வரையும் கட்டுரையாகும். சான்று: "மின்னுவதெல்லாம் பொன்னல்ல", 'முயற்சி திருவினையாக்கும்"; கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு – மாடல்ல மற்றை யவை" முதலியன.

அமைப்பியல்: 1. முன்னுரை, 2. கட்டுரைப் பொருள் இன்னதென்பது, 3. அதன் பொருள்விளக்கம், 4. பொதுச் சான்றுகள், 5. சிறப்புச் சான்று, 6. முடிவுரை.

கருத்தியல் (சிந்தனைக்) கட்டுரை: கருத்தியற் கட்டுரை என்பது ஒரு பொருளைப்பற்றி நன்கு கருதி எழுந்த கருத்துக்களைத் தொகுத்து வரையும் கட்டுரையாகும். சான்று: நாட்டுப் பற்று, பெண்கல்வி, குடியுரிமை, உள்ளொளி [ஆன்மீக] ஒருமைப்பாடு முதலியன. கருத்தியற் கட்டுரையின் அமைப்பியல் பொருள் நிலைக் கேற்ப மாறுபடும். ஆதலின், பொருளுக்கு ஏற்ப அமைப்பியலைச் சிறிது மாற்றம் செய்து கொள்ளல் வேண்டும்.

அமைப்பியல்: 1. முன்னுரை, 2. கல்வியின் வரையறை, 3. கல்வியின் வகை, 4. பெண்கல்வி. 5. பெண்கல்வியின் தேவை, பயன், 7 முடிவுரை.

பாணிப்புக் கட்டுரை: பாணிப்புக் கட்டுரை என்பது இல்லாத நிலைமையை இருப்பதாகக் கற்பனை செய்து முறைப்பட வரையும் கட்டுரையாகும். சான்று: மாந்தன் இறவாப்பெருநிலை எய்தியிருந்தால், என்ன நிகழ்ந்திருக்கும்?" "பரிசுச்சீட்டில், பத்து இலக்கம் உனக்குக் கிடைத்தால், நீ யாது செய்வாய்?" "நீ இந்நாட்டின் தலைமை அமைச்சரானால், உனது செயல் திட்டம் என்ன?" முதலியன.

அமைப்பியல்: 1. முன்னுரை, 2. பொருள் விளக்கம் 3. செயல் திட்டங்கள், 4. விளைவுகள், 5. பயன், 6. முடிவுரை.

தருக்கக் கட்டுரை: தருக்கக் கட்டுரை என்பது கருத்து வேறுபாட்டிற்கு உரிய ஒரு பொருளைப் பற்றி தருக்கமிட்டு, அறுதியில் ஒரே முடிவுக்கு வருமாறு அமைக்கும் கட்டுரையாகும். சான்று: 1. முப்பாலில் சிறந்தது எது? அறத்துப்பாலா? பொருட்பாலா? இன்பத்துப்பாலா? 2. அறிவியலால் நன்மையா? தீமையா? 3. காந்தி அடிகள் வாழ்க்கை அறவாழ்க்கையா? அன்பு வாழ்க்கையா? 4. கற்பிற் சிறந்தவர் யார்? கண்ணகியா? பாஞ்சாலியா? முதலியன.

அமைப்பியல்: 1. முன்னுரை, 2. பொருள் விளக்கம், 3. ஒரு கொள்கை ஆய்வு, 4. பிறிதொரு கொள்கை ஆய்வு, 5, இரு கொள்கைகளையும் ஒப்புநோக்கல், 6. ஒரு முடிவு பெறல், 7. முடிவுரை.

நோட்டக் கட்டுரை: நோட்டக் கட்டுரை என்பது ஒரு பொருளின் குணங்களையும், குற்றங்களையும் நடுநின்று ஆய்ந்து எழுதும் கட்டுரையாகும். சான்று: புராணங்கள், மதங்கள், மறுமணம், மணமுறிவு முதலியன.

அமைப்பியல் :- 1, முன்னுரை, 2. பொருள் விளக்கம், 3. நன்மை, 4. தீமை, 5. ஒப்பு நோக்கு, 6. முடிவுரை.

ஆராய்ச்சிக் கட்டுரை: ஆராய்ச்சிக் கட்டுரை என்பது, ஒரு பொருளை ஆராய்ச்சிக் கண்ணோட்டத்தோடு ஆய்வுசெய்து வரையும் கட்டுரையாகும். சான்று: தலைக்கழகக் காலம், வள்ளுவர் காலம், தொல்காப்பியர் காலம், அகவன் மகளிர் முதலியன.

அமைப்பியல்: 1. முன்னுரை, 2. பொருள் விளக்கம், 3. அகச்சான்றுகள், 4. புறச்சான்றுகள், 5, அறுதியிடல், 6. முடிவுரை.

புகழ்ச்சிக் கட்டுரை: புகழ்ச்சிக் கட்டுரை என்பது, ஒரு பொருளைப்பற்றிப் புகழ்ந்து கூறும் கட்டுரையாகும். அது செம்பொருள் புகழ்ச்சி எனவும், வஞ்சகப் புகழ்ச்சி எனவும் இருவகைப்படும். செம் பொருட் *புகழ்ச்சியாவது வெளிப்படையாய்ப் புகழும் புகழ்ச்சியாகும். வஞ்சகப் புகழ்ச்சியாவது மறைவாய்ப்புகழும் புகழ்ச்சியாகும். சான்று: தமிழர் ஒழுக்கம், ஆங்கிலேயர் பண்பாடு, மகளிர் மறம், சப்பானியர் முன்னேற்றம் முதலியன.

அமைப்பியல்: 1. முன்னுரை, 2. பொருள் விளக்கம், 3. சான்றுகள், 4. சிறப்பும், உயர்வும், 5. பயன், 6. முடிவுரை.

முடிவுரை: இதுகாறும் கூறியவாற்றான் கட்டுரையின் இலக்கணம் ஒருவாறு அறிவுறுத்தப்பட்டது என்க. ஆதலின் மாணக்க, மாணக்கியர் இக்கட்டுரையியலில் கண்ட கருத்துக்களைக் கடைப்பிடிப்பாராக. கட்டுரை வன்மை கை கூடி வருவதாக! கன்னித்தமிழ் மணம் எங்கும் கமழ்வதாக!

தூங்குவது எப்படி?

0 உயிர்களுக்கு உணவு இன்றியமையாதது எப்படியோ, அப்படியே உறக்கமும் இன்றியமையாதது. போதிய உறக்கமில்லையானல் சோம்பல், பசியின்மை, செரியாமை, உடல்வலி ஆகியன ஏற்படும்.

0 சிலருக்கு உறக்கமே வருவதில்லை. மன உளைச்சலாலும் பித்தத்தாலும், வளி [வாய்வு]த் தொல்லைகளாலும் அவ்வாறு உறக்கம் வராமல் இருக்கலாம். இப்படிப்பட்டவர்கள் கிழமைக்கு இருமுறை எண்ணெய்க் குளியல் செய்தல் வேண்டும். இவர்கள் பித்தவளித் தொடர்புடைய காய்கறிகளான அவரை, கொத்தவரை போன்றவற்றை நீக்கி விட்டுக் கற்கண்டு, கொடி முந்திரி [திராட்சை] போன்றவற்றை உணவில் சேர்த்தல் வேண்டும்.

0 தூக்கம் வராதவர்கள் மருதோன்றி என்னும் அழவண மரத்தின் பூவைத் தலைப் பக்கம் வைத்துப் படுத்துக் கொண்டால் அதன் மணம் உறக்கத்தை உண்டுபண்ணும்.

0 இரவில் நெடுநேரம் கண்விழித்து இருப்பவர்கள் தம் கண் பார்வையைக் கொஞ்சங் கொஞ்சமாய் இழக்க வேண்டிவரும்.

0 படுக்கையைக் கிழக்கு மேற்காக அமைத்துத் தலையணையை வைத்துப் படுக்கவேண்டும். மல்லாந்தோ, குப்புறவோ படுத்துறங்கக் கூடாது. ஒருக்களித்துப் படுத்தல் வேண்டும். வடக்குத் தெற்காக உறங்கினல் பிணிகள் உண்டாகும். திறந்த வெளியில் படுக்கக் கூடாது. நிலவுஒளியில் உறங்குதல் கூடாது.

0 இரவு மிகுந்த நேரம் கண் விழித்தவர்கள் மறுநாள் காலை 10-மணிவரை உறங்கலாம். இடையில் எவ்வகை உணவும் உட்கொள்ளக் கூடாது.

0 நாளும் ஆறு மணிநேரம் கட்டாயம் உறங்குதல் வேண்டும். ஆறு மணிநேரம் உறங்கினல் உடல் நலமாக இருக்கும்.

0 விழிப்பு இயற்கையாகவே இருத்தல் வேண்டும். தூங்குபவர்களை இடையில் எழுப்பக் கூடாது.

0 மிகுந்த நேரம் உறங்கிவிட்டவர்கள் எழுந்த பிறகு நான்கு மணிநேரம் எந்த உணவையும் உட்கொள்ளக் கூடாது.

—நன்றி 'மூலிகை மணி' மலர் 7. இதழ்-8.

பத்துக் கட்டளைகள்.

1. ஒன்றையும் முழுமையாக நம்பாதே!

2. உண்மையை மறைத்து வினையாற்றத் துணியாதே! ஒரு போதும் உன்னால் உண்மையை மறைக்க முடியாது.

3. முற்போக்கு எண்ணங்களை வளரவிடு. என்றாவது ஒருநாள் வெற்றிகாண்பது உறுதி!

4. எந்தவகை எதிர்ப்புகளிருந்தாலும் அறிவுள்ள தருக்கத்திற்குப் பின்பே முடிவுக்கு வா. அதிகாரத்தைக் காட்டாதே! அதிகாரம் நிலையானது அன்று!

5. பிறர் அதிகாரத்திற்கு இடம் தராதே! அதிகாரத்திற்கு எதிர் அதிகாரம் உண்டு இல்லையா?

6. பிறர் கருத்துக்களை உன் அதிகாரத்தால் கட்டுப்படுத்தாதே! ஏன்? பிறரின் ஒன்றுசேர்த்த கருத்துத்திரள் உன்னைப் புதைகுழியில் தள்ளும் ஆற்றல் சான்றது!

7. உன் இன்றையக் கருத்து பிதற்றலாகத்தான் தோன்றும்! ஆயினும், அஞ்சாதே! எல்லாரும் ஒப்புக்கொண்ட இன்றைய கருத்துக்கள் ஒரு நாள் பிதற்றலாகத்தான் தோன்றின!

8. உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாதே!

9. உண்மையைப் பேசு! உண்மையாய் நட. உண்மையாக இருப்பது உனக்குப் பல துன்பங்களைத் தந்தாலும், உண்மை பேசாவிட்டால் இதைவிடப் பலமடங்கு மிகுதியான துன்பங்களை நீ பட்டறிய நேரிடும்.

10. "மகிழ்வாக வாழ்கிறான்" என்று பிறன் வாழ்வை நினைத்துப் பொறாமை கொள்ளாதே!

— பெர்த்திரண்டு இரசல். — நன்றி 'மஞ்சரி'

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1. தமிழகம்.